## MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF M/S. N.M. ARUMUGA BALAJI ROUGH STONE QUARRY, SF No. 328 ( PART-III), MELUR DURAISAMYPURAM VILLAGE, RAJAPALAYAM TALUK VIRUDHUNAGAR DISTRICT ON 26.09.2023, 11.00 A.M AT PASUMPON DEVAR KALAIYARANGAM, DOOR NO.32, KASALAI THENVADAL STREET, SEITHUR VILLAGE, RAJAPALAYAM TALUK, VIRUDHUNAGAR DISTRICT

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | J. Ravikumar | : | District Revenue Officer/ Additional District Magistrate, Virudhunagar. |
| 2 | G. Ramaraj | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar. |
| 3 | D.M. Krishnababu | : | Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar. |
| 4 | P.Ramachandran | : | Thasildar, Rajapalayam Taluk. |

Public, Project proponent 85 Nos (List enclosed)

The public hearing under EIA Notification, 2006 for the proposed project of N.M. Arumuga balaji Rough Stone Quarry, SF. No. 328 (part-III), Melur Duraisamypuram Village, Rajapalayam Taluk, Virudhunagar District was conducted at Pasumpon Devar Kalaiyarangam, Door no.32, Kasalai Thenvadal Street, Seithur Village, Rajapalayam Taluk, Virudhunagar District. The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the District Revenue Officer/ Additional District Magistrate, Virudhunagar, other government officials, all general public and project proponents who have attended the public hearing. He informed that the public notices informing the conduct of Public Hearing was published in "Dinathanthi" and "The New Indian Express" on 20.08.2023. He also informed that wide publicity was given about the conduct of public hearing by circulating pamphlets in the nearby villages of the project site. Further, he stated that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. Subsequently, the District Environmental Engineer stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the

public to express their views after completion of the presentation. He added that the written complaints would also be received.

He also stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu.

The District Revenue Officer/ Additional District Magistrate, Virudhunagar initiated the Public Hearing process. After that, the District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project.

Then, the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/s N.M. Arumuga balaji Rough Stone Quarry to the public along with Environmental Management Plan.

After that, the public has furnished their views with respect to the project as follows –

**Thiru. Murugesan, Naranapuram:-**

He informed that he is an engineering graduate worked in Chennai previously and having home near to the proponent quarry. He further told that he is working in the quarry for the last two years and quarry owners are carrying out quarrying activities without any dust emission. He told that around 70-80 peoples are working in the quarry and quarries are livelihood for them and he finally told that there is no impact due to the quarry activity.

**Thiru. Kuththalakkani, Chokkanathanputhur :-**

He told that he is working in the quarry for last three years and it will be good if permission in granted to the quarry.

**Thiru. Thirumalai, Seithur:-**

He told that quarrying of stone is their traditional work and quarrying is the livelihood of 100 families located in that area.

**Thiru. Chandran, Thirumalapuram, Vasudevanallur:-**

He told that he owned a petrol bunk and due to quarrying activities, the jelly stones are easily available to the local public. He further told that quarrying activity is livelihood for them and this activity in useful lorry, tipper and tractor movement.

**Thiru. Patturajan, Seithur:-**

He informed that quarries are being operated in that area for more than 40 years and building construction materials are easily available to public of Seithur area and told it will be good if quarries are operated.

**Tmt. Rajaeswari, Mugavur:-**

She told that the proposed quarry located on western side of Thiru. AKR's quarry and construction materials will be available to the public and the project will be useful to the public. She also gave a written petition in this regard.

**Thiru. Alagumuthu, Chokkanathanputhur:-**

He told that the country was not progressed only due to the quarrying activity during the periods of Thiru. Kamarajar. He informed that it will be good if the meeting was conducted at Chokkanathanputhur and told that school is located near to the quarry. He told that this project is a unnecessary one and it will be good if the project is stopped.

**Thiru. Karuppasamy, Dhalavaipuram:-**

He told that there is no goodness due to this meeting and it was only an eyewash. He told that they have requested to conduct the public hearing meeting at Chokkanathanputhur in the last meeting conducted during April; but, again the meeting is being conducted in the same place. He further told that he is not against the quarry activity and the told the quarry owners to comply with the rules and regulations. He also asked that who will rectify the defects of quarrying activities. There is a revenue loss to the government due to violations. They need not fear for any one if they do business without any violations.

He further requested the government officers to take action against any petitions received on merits. He finally registered the opposition to this project on behalf of himself and "Naam Tamilar Party" and also request to regulate the functioning of existing quarries.

**Thiru. Seetharaman, Chokkanathanputhur:-**

He told that lot of persons are getting affected by the quarrying activities. He also told that the total population of Chokkanathanputhur is 15,000 and the meeting should have been conducted at Chokkanathanputhur only.

He further told that the hill prompoke quarry of M/s. Muthupandian quarry is still under operation even after the permission of Pollution Control Board was expired on March, 2023 itself.

He told that no quarries in that area are complying with rules and regulations, and during blasting activity the stones are flying in school area and it is not possible to conduct classes and Muthupandian quarry is operating during night time also.

He further told that they are not having any faith on any government departments and to cancel this meeting and to conduct the same at Chokkanathaputhur.

He requested not to give permission this the quarry and told that self immolation will be done in front of quarry if permission granted to the quarry.

**Thiru. Sundarrajan. Chokkanathanputhur:-**

He gave his opinion in a written petition.

**Thiru. Marimuthu, Chokkanathanputhur:-**

He told that quarries are in operation since his childhood. The bricks manufactured from quarry dust and are cheap and blue metals are available in cheaper to the local public. He told that as the proposed quarry is located outside the habitation, there will not be any issues and request that permission may be given to the project.

**Thiru.Ramasubramani, Rajapalayam:-**

He told that the meeting should have been conducted at Chokkanathanputhur as per their request in the previous meeting. He also told that school and hospital are located near quarries and the quarries are causing nuisance . He finally told that no permission should be given to this quarry and if any permission granted, then the protest will be carried out against the quarry.

**Thiru. Karupaalagu, Chokkanathanputhur:-**

He told that he owns a pettishop near hospital and lot of dust emission emanated due to blasting activities and vehicle movements. He further told to conduct the meeting at Chokkanathanputhur and to cancel this meeting.

**Thiru.Muniyasamy. Sivagiri:-**

A small buzz among the crowd happened when he started speaking. After that, he told that he is working in the proponent's quarry and the proposed quarry is located for away from school and the quarry is the livelihood for 80 families, who are working there.

**Thiru. Sivakaminathan. Dhalavaipuram:-**

He asked that why a new quarry required, when eight quarries are already in operation in Chokkanathanputhur. He told not to grant permission to quarry, and told that they will handover the ration cards if any permission given to the quarry. He also told that the quarry owners can carry some other works. He further told protest will be carry out if any permission granted to the quarry.

**Thiru.Tamilarasu. Dhalavaipuram:-**

He told that the opposing the quarry is not their intention and quarry is affecting livelihood of 15,000 People. He also told that agricultural lands are located around the village and questioned why the meeting was not able to conduct at Chokkannathanputhur. The natural resources & environment are getting affected by quarries and no quarries are following the regulations. He finally told that protest will taken forward if any permission given.

**Thiru. Ramachandran. Krishnapuram:-**

He told that the meeting is being conducted here instead of Chokkanathanputhur and registered his opposition to the quarry on behalf of himself & "Naam Tamilar Party".

**Thiru. Seetharaman. Chokkanathanputhur:-**

When he spoken again, he requested to inspect the quarry under operation, which is located opposite the school and to ensure that the quarrying is carrying out at the permitted location. He once again requested to conduct the meeting at Chokkanathanputhur.

**Thiru. Karuppasamy. Dhalavaipuram:-**

He requested to give assurance of all government department that no violations of rules will happen in the quarrying operation.

**Thiru. Marimuthu, Chokkanathanputhur:-**

He clarified that proposed quarry is not located near to the school and it is located outside the habitaion, western side of M/s AKR quarry.

**Thiru. Jayasundar, Dhalavaipuram :-**

He told to cancel the meeting and to conduct the same at Melur Duraisamypuram. He asked the necessities of new quarry, when seven number of quarries are already in operation in Melur Duraisamypuram within a 3 km circle. He told, his opposition to the existing quarry operations, eventhough he didn't oppose this new quarry. He further told that the quarry operations are the main reasons for the stoppage of maternity operations in the nearby government hospital. He also told that the people safety and environment are getting affected due to quarries. Future, he told the big protest will be conducted if any permission is granted.

**Thiru.Ravanakumar, Mugavur, Muthusamypuram:-**

He told that flying stone during blasting operation, is the main issue for the near by school. He told that stones will be flied into school area during blasting operation. He also told that he didn't have any faith on this meeting and registered his opposition to the project.

After that, since no one came forward to give view on the project, the District Revenue Officer/ Additional District Magistrate, Virudhunagar invited the public to offer their further more views if any. Even after that, no one came forward to give any opinion. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted. He also thanked all and requested to furnish their views if any in written and 13 numbers of petitions were received in person.

With this, the meeting came to the end.

| | |
|---|---|
| 4.10.2023 | 4.10.2023 |
| District Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Virudhunagar | District Revenue Officer /<br>Additional District Magistrate,<br>Virudhunagar |

Enclosures:

1. Copy of Attendance Register (Total 7 – pages, 85 persons)
2. Videograph of public hearing meeting (CD format)
3. Copy of Public Notices (both Tamil & English).

**விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் வட்டம், மேலூர் துரைசாமிபுரம் கிராமம், புல எண்: 328 (Part-III)–ல் தி/ள். என். எம். ஆறுமுக பாலாஜி உடைகல் குவாரி தொடர்பாக 26.09.2023 முற்பகல் 11.00 மணியளவில் விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் வட்டம், சேத்தூர் கிராமம், கதவு எண்: 32, கசாலைத் தென்வடல் தெருவில் உள்ள பசும்பொன் தேவர் கலையரங்கத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. ஜெ. ரவிகுமார் | : | மாவட்ட வருவாய் அலுவலர்/<br>கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர்<br>விருதுநகர். |
| 2 | திரு. கு. இராமராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 3 | திரு. து.மு. கிருஷ்ணபாபு | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 4 | திரு. P. இராமசந்திரன் | : | வட்டாசியர்,<br>இராஜபாளையம் வட்டம்,<br>விருதுநகர். |

பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 85 நபர்கள் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் வட்டம், மேலூர் துரைசாமிபுரம் கிராமம், புல எண் : 328 (Part-III)-ல் தி/ள். என். எம். ஆறுமுக பாலாஜி உடைகல் குவாரி நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, பொது மக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் வட்டம், சேத்தூர் கிராமம், கதவு எண்: 32, கசாலைத் தென்வடல் தெருவில் உள்ள பசும்பொன் தேவர் கலையரங்கத்தில் 26.09.2023 முற்பகல் 11.00 மணியளவில் துவங்கியது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட வருவாய் அலுவலர்/கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர், ஏனைய அரசு அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து ஏற்கனவே "தினத்தந்தி" மற்றும் "தி நியு

இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 20.08.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வழங்கலாம் என கேட்டுக்கொண்டார். எழுத்துப்பூர்வமாக விண்ணப்பங்கள் வழங்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் என தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் எனத் தெரிவித்தார்.

பிறகு, மாவட்ட வருவாய் அலுவலர்/கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர், விருதுநகர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டு, அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன்பின் தி/ள். என். எம். ஆறுமுக பாலாஜி உடைகல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

<u>திரு. முருகேசன், நாரணபுரம்:</u>

திரு. முருகேசன் அவர்கள், குவாரிக்கு அருகில் தன்னுடைய வீடு இருப்பதாகவும், பொறியியல் பட்டதாரியாக சென்னையில் வேலை பார்த்த அவர், கடந்த இரண்டு வருடங்களாக குவாரியில் பணியாற்றி வருவதாகவும் கூறினார். இக்குவாரி உரிமையாளர்கள் இப்பகுதி மக்களுக்கு தேவையான உதவிகள் செய்து தருவதாகவும், அவர்களுடைய குவாரி செயல்பாட்டின் போது தூசி ஏதும் பரவாமல் செயல்படுவதாகவும் கூறினார். மேலும், குவாரியில் 70 முதல் 80 பேர் வரை வேலை செய்து வருவதாகவும்,

அத்தொழிலானது அவர்களின் வாழ்வாதாரமாக விளங்குவதாகவும் தெரிவித்தார். முடிவில் குவாரியினால் எவ்வித பாதிப்பும் இல்லை எனக்கூறினார்.

திரு. குத்தாலக்கனி, சொக்கநாதன்புத்தூர்:

திரு. குத்தாலக்கனி அவர்கள், தான் இக்குவாரி உரிமையாளரின் குவாரியில் மூன்று வருடமாக வேலை பார்த்து வருவதாகவும், குவாரிக்கு அனுமதி அளித்தால் நன்மையாக இருக்கும் எனக்கூறினார்.

திரு. திருமலை, சேத்தூர்

திரு. திருமலை அவர்கள், கல் உடைக்கும் தொழிலானது அவர்களது குலத்தொழில் எனவும், குவாரித்த தொழிலானது அங்கள்ள 100க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதாரமாக இருப்பதாகவும் கூறினார்.

திரு. சந்திரன், திருமலாபுரம், வாசுதேவநல்லூர்

திரு. சந்திரன் அவர்கள், தான் பெட்ரோல் பங்க் தொழில் நடத்தி வருவதாகவும், குவாரி தொழிலால் அப்பகுதி மக்களுக்கு கற்கள் கிடைப்பதாகவும், தங்களுடைய தொழிலான லாரி, டிப்பர், டிராக்டர் போன்ற வாகன இயக்கம் தொடர்பான தொழிலுக்கு இக்குவாரி தொழினாது ஆதாரமாக விளங்குவதாக தெரிவித்தார்.

திரு. பட்டுராஜன், சேத்தூர்

திரு. பட்டுராஜன் அவர்கள் 40 வருடங்களாக இப்பகுதியில் குவாரிகள் இயங்கி வருவதாகவும், மேலும் சேத்தூர் பகுதியில் உள்ளவர்களுக்கு வீடு கட்ட தேவையான பொருட்கள் எளிதாக கிடைப்பதாகவும், குவாரி இயங்கினால் நல்லது எனவும் கூறினார்.

திருமதி. இராஜேஸ்வரி, முகவூர்

திருமதி. இராஜேஸ்வரி அவர்கள் இந்த குவாரியானது திரு AKR அவர்களின் குவாரிக்கு மேற்கு புறமாக அமைந்துள்ளது எனவும், இக்குவாரியினால் மக்களுக்கு கற்கள் கிடைக்கும் என்றும், இத்திட்டம் வந்தால் மக்களுக்கு பயனாக இருக்கும் என்றும் கூறினார். மேலும், இது குறித்த மனு ஒன்றையும் அளித்தார்.

திரு. அழகுமுத்து, சொக்கநாதன்புத்தூர்

திரு. அழகுமுத்து அவர்கள், காமராஜர் காலத்தில் குவாரி தொழிலினால் மட்டும் நாடு முன்னேறவில்லை என்றும், இக்கூட்டத்தை சொக்கநாதன்புத்தூரில் நடத்தயிருந்தால் நன்றாக இருந்திருக்கும் எனவும், இக்குவாரிக்கு அருகிலேயே பள்ளிக்கூடம் இருப்பதாகவும், இது ஒரு தேவையில்லாத திட்டம் எனவும் கூறினார். மேலும் இதை நிறுத்தினால் நல்லது

எனவும் கூறினார்.

திரு. கருப்பசாமி, தளவாய்புரம்

திரு. கருப்பசாமி அவர்கள், இக்கூட்டத்தினால் எவ்வித நன்மையும் இல்லை என்றும், இது வெறும் கண்துடைப்புதான் எனவும் கூறினார். மேலும் ஏப்ரல் மாதத்தில் நடந்த கூட்டத்தில் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டமானது சொக்கநாதன்புத்தூரில் நடத்த வேண்டும் என கேட்டுக்கொண்டதாகவும், ஆனால் மீண்டும் இங்கேயே கூட்டம் நடத்தப்படுவதாகவும் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், தனக்கு குவாரித் தொழில் தொடர்பாக எந்த ஆட்சேபனையும் இல்லை என்றும், ஆனால் குவாரிகள் சட்ட விதிமுறைகளை முறையாக கடைபிடித்து நடக்க வேண்டுமெனவும் கூறினார். குவாரி செயல்பாட்டினால் ஏற்படும் பாதிப்புகளை யார் சரி செய்வது எனவும் வினவினார். குவாரி உரிமையாளர்கள் அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டும் எனக் கூறினார். குவாரி பாதிப்பை யார் சரி செய்வார்கள் குவாரிகளின் விதிமீறல்களால் அரசுக்கு இழப்பு. நேர்மையாக தொழில் செய்தால், யாருக்கும் பயப்பட வேண்டாம். விதிமுறைகள் இருந்தால் உடன் சரி செய்யவேண்டும்.

அரசு அதிகாரிகள், பெறப்படும் புகார்களின் உண்மைத்தன்மையை ஆராய்ந்து முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். முடிவில், நாம் தமிழர் கட்சி சார்பில் இக்குவாரிக்கு தங்களின் எதிர்ப்பை பதிவு செய்வதாகவும் மற்றும் ஏற்கனவே உள்ள குவாரிகளை முறைப்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

திரு. சீத்தாராமன், சொக்கநாதன்புத்தூர்

திரு. சீத்தாராமன் அவர்கள் குவாரியின் செயல்பாட்டால் பாதிப்படைபவர்கள் அதிகம் எனக்கூறினார். மேலும், 15 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட சொக்கநாகன்புத்தூரில் இக்கூட்டத்தை நடத்தியிருக்க வேண்டும் எனவும் கூறினார்.

சொக்கநாதன்புத்தூர் மலை புறம்போக்கில் செயல்படும் திரு. முத்துபாண்டியன் அவர்களின் குவாரியின் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இசைவாணையானது மார்ச் மாதத்துடன் முடிவடைந்த நிலையில் இன்று வரை நடைச்சீட்டு பெற்றுவருவதாக கூறினார்.

இப்பகுதியில் உள்ள எந்த குவாரிகளிலும் எந்த விதிமுறைகளையும் கடைப்பிடிக்கப்படுவதில்லை எனவும், பள்ளியில் கற்கள் விழுகின்றன என்றும், குவாரி வெடிச்சத்ததினால் பள்ளியில் பாடம் நடத்த முடியவில்லை என்றும், திரு. முத்துபாண்டியன்

அவர்களின் குவாரியானது இரவு நேரங்களிலும் செயல்படுவதாக கூறினார்.

மேலும் அவர் கூறுகையில் எந்த அரசு துறைகள் மீதும் தங்களுக்கு நம்பிக்கையில்லை என்றும், இக்கூட்டத்தை இரத்து செய்துவிட்டு, சொக்கநாதன்புத்தூரில் கூட்டம் நடத்த வேண்டும் என்றும், அங்கு எடுக்கப்படும் முடிவுக்கு தாங்கள் கட்டுபடுவதாகவும் கூறினார்.

குவாரிக்கு அனுமதி அளிக்க கூடாது எனவும், மீறி அனுமதி அளித்தால் குவாரி முன் தீக்குளிப்பு நடத்தப்படும் எனவும் கூறினார்.

திரு. சுந்தர்ராஜன், சொக்கநாதன்புத்தூர்

திரு. சுந்தர்ராஜன் அவர்கள் எழுத்து பூர்வமாக தன்னுடைய கருத்தை மனுவாக அளித்தார்.

திரு. மாரிமுத்து, சொக்கநாதன்புத்தூர்

திரு. மாரிமுத்து அவர்கள், அவருடைய சிறுவயதிலிருந்தே இப்பகுதியில் குவாரிகள் செயல்படுவதாகவும், குவாரி தூசியில் தயாரிக்கப்படும் செங்கல் விலை குறைவாக இருப்பதாகவும், அருகில் உள்ள மக்களுக்கு ஜல்லி கற்கள் குறைவான விலையில் கிடைப்பதாகவும், உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரி ஊருக்கு ஒதுக்குபுறமாக இருப்பதால் இக்குவாரியினால் எந்த பிரச்சனையும் இல்லை எனவும் கூறினார். குவாரிக்கு அனுமதி அளிக்கலாம் எனவும் கூறினார்.

திரு. இராமசுப்பிரமணி, இராஜபாளையம்

திரு. இராமசுப்பிரமணி அவர்கள், கடந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் கேட்டுக்கொண்டபடி இக்கூட்டமானது சொக்கநாதன்புத்தூரில் நடத்தப்பட வேண்டும் எனக் கூறினார். குவாரிக்கு பக்கத்தில் பள்ளி மற்றும் மருத்துவமனை அமைந்துள்ளன என்றும், இப்பகுதியில் கல்குவாரி இருப்பது இடைஞ்சல்தான் எனவும் கூறினார். குவாரிக்கு அனுமதி அளிக்ககூடாது எனவும், மீறி அனுமதி அளித்தால் கல்குவாரி முற்றுகை போராட்டம் நடத்தப்படும் எனவும் கூறினார்.

திரு. கருப்பழகு, சொக்கநாதன்புத்தூர்:

திரு. கருப்பழகு அவர்கள், தான் மருத்துவமனைக்கு முன் பெட்டிக்கடை அமைந்திருப்பதாகவும், குவாரி வெடி வெடிக்கும் பொழுதும், வண்டி போக்குவரத்தின் பொழுதும் அதிகமாக தூசி பரவுவதாகவும் தெரிவித்தார். மேலும், கருத்து கேட்பு கூட்டத்தை சொக்கநாதன்புத்தூரில் நடத்த வேண்டும் என்றும், இக்கூட்டத்தை ரத்து செய்ய வேண்டும் எனவும் கூறினார்.

திரு. முனியசாமி, சிவகிரி

திரு. முனியசாமி அவர்கள், பேச ஆரம்பித்த பொழுது கூட்டத்தில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது.

தொடர்ந்து பேசுகையில், தான் இக்குவாரியில் வேலை பார்ப்பதாகவும், தற்பொழுது உத்தேசிக்கபட்டுள்ள குவாரியானது பள்ளியிலிருந்து தொலைவில் அமைந்துள்ளதாகவும், குவாரி செயல்படாவிட்டால் விலைவாசி உயரும் என்றும், குவாரி வந்தால் 80 குடும்பங்களுக்கு வாழ்வாதாரமாக அமையும் எனவும் கூறினார்.

திரு. இரா. சிவகாமிநாதன், தளவாய்புரம்

திரு. சிவகாமிநாதன் அவர்கள், சொக்கநாதன்புத்தூரில் ஏற்கனவே எட்டு குவாரிகள் உள்ள நிலையில் எதற்காக புதிய குவாரி வேண்டும் என வினவினார். புதிதாக குவாரிக்கு அனுமதி அளிக்க கூடாதெனவும், மீறி வழங்கினால் குடும்ப அட்டைகளை திரும்ப அளிப்போம் எனவும் கூறினார். குவாரி உரிமையாளர்கள் கல் உடைக்கும் தொழிலை விட்டுவிட்டு வேறு தொழில்கள் செய்யலாம் எனவும் கூறினார். சொக்கநாதன்புத்தூரில் புதிய குவாரிக்கு அனுமதி அளிக்க கூடாது எனவும், மீறி அனுமதி அளித்தால் போராட்டம் நடைபெறும் எனவும் கூறினார்.

திரு. தமிழரசு, தளவாய்புரம்:

திரு. தமிழரசு அவர்கள், கல்குவாரியை எதிர்ப்பது தங்கள் நோக்கமல்ல என்றும், குவாரியினால் சொக்கநாதன்புத்தூரில் உள்ள 15,000 குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிப்படைகிறது எனவும் கூறினார். அந்த ஊரை சுற்றி விவசாய நிலங்கள் உள்ளதாக தெரிவித்து, ஏன் சொக்கநாதன்புத்தூரில் கூட்டம் நடத்த இயலவில்லை என வினவினார். குவாரி அமைவதினால் கனிமவளம் சுரண்டப்படுவதாகவும், இயற்கை வளம் பாதிப்படைவதாகவும் தெரிவித்தார். எந்த குவாரியும் சட்ட விதிமுறைகளை முறையாக பின்பற்றுவதில்லை எனவும், குவாரிக்கு அனுமதி அளித்தால் குவாரி எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் கூறினார்.

திரு. இராமசந்திரன், கிருஷ்ணாபுரம்

திரு. இராமசந்திரன் அவர்கள், கூட்டமானது சொக்கநாதன்புத்தூரில் நடத்தாமல் இங்கு நடைபெறுகிறது எனவும், ஒரே இடத்தில் அதிக குவாரிகள் அமைக்க நாம் தமிழர் கட்சி சார்பாகவும், தன்னுடைய சார்பாகவும் எதிர்ப்பை பதிவு செய்தார்.

திரு. சீத்தாராமன், சொக்கநாதன்புத்தூர்

திரு. சீத்தாராமன் அவர்கள் மீண்டும் பேசுகையில், சொக்கநாதன்புத்தூர் அரசு

பள்ளிக்கு எதிரில் செயல்பட்டு வரும் குவாரியையும், குவாரி மற்றும் பள்ளிக்கும் இடைப்பட்ட தொலைவையும் ஆய்வு செய்து, அக்குவாரியானது அனுமதிக்கப்பட்ட இடத்தில் தான் நடைபெறுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். இக்கூட்டத்தை சொக்கநாதன்புத்தூரில் நடத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

திரு. கருப்பசாமி, தளவாய்புரம்

திரு. கருப்பசாமி அவர்கள் மீண்டும் பேசுகையில், இங்குள்ள அரசு துறைகளும், கனிம வளதுறையும் இங்குள்ள குவாரிகள் எதுவும் விதிமுறைகளை மீறி நடக்காது என உறுதி அளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

திரு. மாரிமுத்து, சொக்கநாதன்புத்தூர்

திரு. மாரிமுத்து அவர்கள் மீண்டும் பேசுகையில், தற்பொழுது நடைபெறும் கூட்டம் தொடர்பான குவாரியானது, பள்ளிக்கு அருகில் இல்லை என்றும், ஊருக்கு வெளியே திரு. AKR அவர்களின் குவாரிக்கு மேற்குபுறமாக அமைந்துள்ளது எனவும் கூறினார்.

திரு. ஜெயசுந்தர், தளவாய்புரம்

திரு. ஜெயசுந்தர் அவர்கள், இக்கூட்டத்தை முழுமையாக இரத்து செய்துவிட்டு மேலூர் துரைசாமிபுரத்தில் நடத்த வேண்டும் எனக் கூறினார். மேலும் துரைசாமிபுரத்தில் 3 கி.மீ சுற்றளவிற்குள் ஏற்கனவே 7 (ஏழு) குவாரிகள் செயல்பாட்டில் இருக்கும் பொழுது, எதற்காக புதிதாக எட்டவதாக குவாரிக்கு அனுமதி அளிக்க வேண்டும் என வினவினார். புதிதாக வரும் இந்த குவாரிக்கு எதிர்ப்பு தெரிவிக்காவிட்டாலும், ஏற்கனவே நடைபெறும் குவாரிகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக தெரிவித்தார். அங்குள்ள மருத்துவமனையில் தற்பொழுது பிரசவம் நடைபெறாமல் இருப்பதற்கு குவாரிகளே காரணம் எனவும் கூறினார். இங்குள்ள குவாரிகளின் செயல்பாட்டால் அங்குள்ள மக்கள் பாதுகாப்பு இல்லாமல் இருப்பதாகவும், சுற்றுச்சூழல் பாதிப்படைவதாகவும் தெரிவித்தார். இந்த கூட்டத்தை இரத்து செய்து விட்டு செக்கநாதன்புத்தூரில் நடத்த வேண்டும் எனவும், இந்த குவாரிக்கு அனுமதி அளித்தால் பெரும் போராட்டம் நடைபெறும் எனவும் கூறினார்.

திரு. இராவணக்குமார், முகவூர் முத்துசாமிபுரம்

திரு. இராவணகுமார் அவர்கள் குவாரியில் வெடி வெடிக்கும் பொழுது பள்ளிக்கூடத்தில் கற்கள் வந்து விழும் என்றும், இந்த கூட்டத்தில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும், இத்திட்டத்திற்கு தன் எதிர்ப்பை பதிவு செய்வதாகவும் கூறினார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக்கூற வேறு யாரும் முன்வராததால், மாவட்ட வருவாய் அலுவலர்/கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர், அவர்கள், மேலும் கருத்துகள் ஏதும் இருக்கிறதா என்று வினவினார். அதன் பின்பும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் ஏதும் வரவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் இதுவரை நடந்ததை தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். மேலும், எழுத்துப்பூர்வவமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து, எழுத்துப்பூர்வமாக 13 மனுக்கள் பெறப்பட்டன.

அத்துடன் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

4.10.2023

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்

4.10.2023

மாவட்ட வருவாய் அலுவலர் /
கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர்,
விருதுநகர்

இணைப்புகள்:

1. வருகைப்பதிவேடு நகல் (மொத்தம் - 7 பக்கங்கள், 85 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கை செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).